ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

अवश्यलभ्यं यदि यत्स्वकर्मजं करोतु दुःखं मम तद्विषज्जनः ।
तदूनताया मभितस्समाहितो लघूकरिष्यत्यतिभारमाहितम् ॥

எனது ஸொந்தகர்மங்களினாலேற்பட்டு அவசியம் அடையவேண்டியதாக நேர்ந்த துக்கத்தை நம் சத்துரு ஜனங்கள் தாம் செய்ததாக நினைத்துக்கொள்வதானால் நினைத்துக்கொள்ளட்டும், செய்வதானாலும் செய்யட்டும். நாமாகத்தேடி பாபப் பயனை அனுபவிக்கும் பிரயாஸத்தைச் சுமப்பதைவிட அதைக் கொஞ்சம் குறைக்கப் பலவழியிலும் ஒருவன் ஊக்கத்துடன் வேலைசெய்வானாகில் அது இலகுவாக ஆகுமல்லவா? பிராணிகளுக்கெல்லாம் பயனையளிப்பவன் பரமேசுவரனே. ஆனால் அவரும் பிராணிகளின் புண்ணியபாபங்களை யபேக்ஷித்துத்தான் பயனை அளிக்கிறார். ஆனதால் எவன் எப்படிக் கர்மாசெய்தானோ அதற்கேற்றபடி பயனைக்கண்டிப்பாய் அளித்திடுவார். ஆகவே ஒருவன் முன்செய்த கர்மாவின் பயன் வேண்டாமென்று வெறுத்தாலும் விட்டுப்போகாது. அவசியம் வந்தேதீரும். அனுபவித்தேதான் தீர்க்கவேண்டியது. இவ்வாறு ஒருவன் செய்த கர்மாவுக்குப் பரமேசுவரனால் பயன் அளிக்கப்பட்டு வருகையில் ஒருகாலத்தில் அவன் துக்கத்தை அனுபவிக்கும்படி நேர்ந்தால் அதுவும் கடவுளாலேயே தருவிக்கப்பட்டதே யன்றி வேறொருவன் செய்ததல்ல. ஆயினும் அவனது சத்துருக்கள் அதைத்தான்உண்டுபண்ணி விட்டதாக நினைத்துக்கொள்வார்கள். அப்படி நினைத்துக்கொண்டு அகமகிழ்வார்கள். அப்படி இதைக்கண்டுசிலர்ஸஹிக்கமாட்டார்கள். ஸாதுக்களோவெனில் கர்மகதியைநன்றாகத் தெரிந்துகொண்டவர்களாகையால் கடவுளாலமைக்கப்பட்டதை தான்செய்துவிட்டதாக பிரமித்துக்கொண்டு சத்துரு சந்தோஷப்படுவானாகில் அதைப் பூர்ணமனதுடன் சம்மதிப்பார்கள். எப்படியாவது அந்தப்பிராணி சந்தோஷப்படுகிறதல்லவா? சந்தோஷப்படட்டுமென்று நினைப்பார்களேயன்றி பொறாமையடையமாட்டார்கள். அன்றியும் நாம் செய்த கெட்டகர்மாவின் பயனாகிய துக்கத்தை நாம் அவசியம் அனுபவிக்க வேண்டியதாயினும் அதை நாமாகவே உண்டுபண்ணிக்கொண்டு அனுபவிப்பது அதிகப் பிரயாஸமாகும். அந்த சுமை நமக்கில்லாமல் அதைக்குறைத்து நாம் நினைக்காமலிருக்கும்பொழுதே திடீரென்றுதான் கொண்டு விட்டதாக சத்துருஜனம் எண்ணிக்கொள்வது நம்முடைய பாரத்தைக்குறைத்ததாகவல்லவா ஆகிறது. அது உபகாரந்தானேயென்று தன்னுடைய பகுத்தறிவால் பாவித்துக்கொள்வார்கள். இவ்விதமாயுள்ள ஸாதுக்களின் உத்தமகுணம் மிகவும் சிலாகிக்கத்தகுந்தது. எல்லோராலும் விரும்பத்தக்கது. மனக்கவலையை நீக்கி மனக்களிப்பைத் தரக்கூடியது. ஆனாலும் அதைநடப்பில்கொண்டுவருவது அஸாத்தியமாகுமென்று உபேக்ஷையாயிருந்துவிடாமல் யாவரும் நன்முயற்சிசெய்து அத்தகைய நற்குணத்தை நாடிநன்மையையடைவாராக.

சுபம்.

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸஹு சித்திரைமீ ௩௦௨

பஞ்சாங்கம் பலவிதப்பட்டதற்கு என்னசெய்யலாம்?

பஞ்சாங்கம் பலவிதப்பட்டிருப்பது பிரத்தியக்ஷமாயிருக்கிறது. அதற்குக் காரணம் சாஸ்திரமென்று சொல்வதற்கில்லை. ஸூர்யசந்திராதி வியக்தியுமொன்று. அசுவதி முதலிய நக்ஷத்திரங்களுடையவும், மேஷாதி ராசிகளுடையவும், வியக்தியுமொன்றே. ஆகவே ஸூர்யாதிக்கிரஹங்கள் மேஷாதி ராசிகளில் பிரவேசிப்பதாகிய ஸங்கிரமணாதிகாலங்கள் சாஸ்திர ரீதியாய் ஒரே விதமாகத்தான் இருக்கவேண்டுமேயன்றி தற்காலம் பலவகைப்பட்ட பஞ்சாங்கங்களில் காணப்படுகிறபடி பலவிதமாயிருக்கமுடியாது. தெரிந்தவர்களும் அந்தப் பஞ்சாங்கப்படி ஸங்கிரமண காலமிது. இந்தபஞ்சாங்கப்படி இது என்று நிராதாரமாய் வியவஹரித்து வருகிறார்கள். இதுபோலவே திதி முதலியவைகளிலும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இது சாஸ்திரத்தால் வந்தது அல்ல. ஆனால் புருஷாபராதத்தாற்றான் வந்ததாகச் சொல்லவேண்டும். அந்த புருஷாபராதத்தை விலக்க தர்மாசாரியாளவர்களும், அவர்களின் அனுக்ரஹம்பெற்ற பண்டித மணிகளும் வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டியது. ஆனால் அது இப்பொழுது ஔதாஸீன்யத்தாலும், அபிமானவசத்தாலும், தாக்ஷிண்யத்தாலும் நடைபெறவதில்லை. கர்மாவின்காலம் பஞ்சாங்க பேதத்தால் பேதப்பட்டுவரும்பொழுது ஒவ்வொருவனும் தனித்தனியே செய்யவேண்டிய கார்யங்களில் கையில்கிடைத்த பஞ்சாங்கத்தில் கண்டபடி செய்துவிடுவதாகத் துணிந்துவிட்டபோதிலும் பலபேர் பொதுவாக ஒன்றுசேர்ந்து செய்யக்கூடிய உபாகர்மம் முதலியகாலங்களில் பஞ்சாங்கபேதத்தால் பல வேற்றுமை ஏற்பட்டிருப்பதற்கு என்னசெய்யலாமென்று பலவிதம் ஆலோசனை செய்கிறார்கள். ஒருவிதமாகவும் முடிவுக்குவந்ததாகத்தெரியவில்லை. பத்திரிகைகளிலும் தமது ஆசங்கைகளை அவற்றின் பரிஹாரத்தை எதிர்பார்த்து வெளியிடுகிறார்கள். அவையெல்லாம் ஆரண்யத்தில் போட்ட சத்தம்போல் ஆய்விடுகிறது. யாரேனும்

ஒருவர் சாஸ்திரசம்மதமாயெழுதுவாரானால் பக்ஷபாதமாய்ப் பேசுகிறாரென்று பழி சுமத்திவிடுகிறார்கள். எந்த பஞ்சாங்கத்தை எவர் அபிமானிக்கின்றாரோ, அதன்படியே அவர் அனுஷ்டித்து வரவேண்டியதென்று சிலர் வியவஸ்தை கூறுகின்றார். வேறு சிலர் திதியாதிகளுக்குத் திருக்கணிதம் கூடாதென்றும், கிரஹ ஸஞ்சாரம், கிரஹணம், ஜாதக பலன் முதலியவைகளுக்குத் திருக்கணிதந்தான் தேவலை என்றும், கூறுகின்றனர். அதற்காகச் சில பிரமாண வசனங்களை உதாஹரிக்கின்றனர். அதனால் சிலர் மனது தயங்குகின்றது. வாக்கியபஞ்சாங்கங்களென்று பெயர் வைத்து வழங்கப்பட்டுவரும் பஞ்சாங்கமும் பலபேர்களால் பிரசுரிக்கப்பட்டுவருகின்றது. அதில் ஒருவரது பிரசுரம்போல் மற்றவரது பிரசுரமிருக்கவில்லை, வாக்கியபஞ்சாங்க கணனத்திற்கு வாக்கியந்தானே பிரமாணம். அது ஒருவிதந்தானே? அதில் பேதம் வருவானேன் என்றால் அதற்குச் சரியான சமாதானம் இல்லை. சித்தாந்த பஞ்சாங்கங்களிலுமிப்படியே இருக்கின்றது, இதற்கெல்லாம் சரியான சமாதானம் வேண்டுமென்று அபேக்ஷித்துத்தான் சென்ற ஸஞ்சிகையில் பஞ்சாங்கபேதத்தால்வரும் காலபேதத்திற்கு என்னசெய்யலாமென்று ஒருவர் கேட்டிருக்கிறார். உபாகர்ம காலத்தைக்குறித்துக் கேட்டிருந்தாலும் பொதுவாக எல்லா விஷயங்களிலும் கேட்டதாகவேதான் கொள்ளவேண்டும். உபாகர்மகாலவிஷயத்தில் ஒரு வியவஸ்தை ஏற்பட்டால் அதையே எல்லாவற்றிலும்வைத்துக்கொள்ளலாம். அதனால் ஜ்யோதிஷ சாஸ்திரத்திலும், தர்மசாஸ்திரத்திலும் மற்ற ஸாமான்ய சாஸ்திரங்களிலும் துல்யமாகத் தேர்ச்சியடைந்த பண்டித சிரேஷ்டர்கள் பலபேர் சேர்ந்து விசாரம்செய்து ஒரு வியவஸ்தைசெய்து வைத்தால் உலகத்திற்குப் பரமோபகாரம் செய்ததாக ஆகும். இதற்காகப் பலபேர் ஓரிடத்தில் வந்து கூடுவதானால் லௌகிகமான செலவு ஏற்படுமே, அதை யார் பொறுத்துக்கொள்ளுகிறதென்பதாதி கவலைப்படவேண்டாம். இந்த விஷயத்தில் அவாவர்களுக்குத் தோன்றுவதை ஆர்யதர்மமூலமாய் தெரிவித்தால் அதிலிருந்து பலபேர்களின் ஸம்மதியை அனுஸரித்து ஒருவிதம் வியவஸ்தை செய்யப்பார்க்கலாம். ஆகையால் அப்படியே பெரியோர்கள் செய்து லோகோபகாரத்தைச் செய்வார்களாக.

சுபம். ——— பத்திராதிபர்.

கல்வி.

(345-ம் பக்கத்தொடர்ச்சி.)

பால்யத்திலேயே கல்வி கற்கவேண்டும். அப்படியானால் அனேகசௌளகரிய முண்டு. அதாவது பால்யத்தில் கல்வி கற்பதினால் வீட்டு விசாரங்களின் பாரம்நம்மின்மேல் உரைக்காமலும் நமக்கு கல்வியைத் தவிர வேறு செய்பவேண்டியவை ஒன்றும் இல்லாமையாலும், அது மனதில் சுகமாய்ப் பதியும். வயதாகிய பிறகு "கல்விகற்றல்" என்பது வீட்டுக் கவலைகளுடன் பார்க்க வேண்டியிருப்பதாலும், மற்றும்பல காமாதி விசாரங்கள் நேர்ந்து விடுகிறபடியாலும், கல்வியும் சீக்கிரம் நமது மனதில் நிலை அடைவதில்லை என்பது அநுபவஸித்தம். ஆகையினால் இன்னும் மற்ற விஷயங்களை யோஜித்துப்பார்க்கபோகிலும் இளமையில் கற்றுக் கொள்வதுதான் சிறந்தது" என்று தெரிகிறது.

கல்வியைக்கொண்டு அறிவின்மையை நீக்கி அறிவைப் பெருக்கிக்கொள்ள சில முறைகளுண்டு. அவையாவன,

1, வேதங்களிலும் பெரியோர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதும், இயற்றப்பட்டதும், அவர்களால் கையாண்டுவரப்பட்டதுமான அறிவு புகட்டும் நூற்களிலும் சதா மனதைச் செலுத்தி அவைகளை அறிந்துகொள்வது.

2. பல சங்கங்கட்குச் சென்று அங்குள்ள அங்கத்தினர்களுடன் வேற்றுமையின்றி

"மனத்தூய்மை செய்வினை தூய்மையிரண்டுமினந்
தூய்மைதுவாவரும்" என்று

நாயனார் கூறியவாறு பழகி பரிசுத்த மனத்தராய் சம்பாஷித்தல்.

3. கற்று வல்லுனராகிய பெரியோர்கள் செய்யும் உபந்நியாசங்களை உற்றுக்கேட்டு அவற்றை மனத்திலிருத்துவது.

4. "குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டிர், விருந்தில்லான் வீடும் விழல்" என்றபடி குரு முன்னிலையிற்கற்றுணராத கல்வி பயன்படுமாறில்லை. ஆதலால் நல்லாசிரியனைக் கண்டடைந்து முறைப்படி வழிபாடியற்றி அவர்சொல்வதை ஊக்கத்துடனும், வணக்கத்துடனும் செவியுறக் கேட்டு, அவர் மனமு

வப்ப நடந்து அவரை நம் குணங்களால் திருப்தி செய்து வைப்பது.

5. நாம் எது கற்றாலும் "கற்கக் கசடறக்கற்றவை கற்ற பின் நிற்கவதற்குத்தக" என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிற படி கற்பதை குற்றமறக் கற்று அக் கல்வியறிவுற்குத் தக்கபடி நிற்கவேண்டும்.

நம்மையும் நம் நாட்டாரையும் பரிபாலனம் செய்துவரும் ஐரோப்பிய நாட்டாரைக் கவனிப்போம். அவர்களில் ஒருவராகிலும், நவீன நூல்களையும் பத்ரிகைகளையும் வாங்கி வாசிக்காதவர்கள் கிடையாது, சங்கங்களிற் சென்று பழகாதவரும் கிடையாது. இப்பொழுது அநேக சபைகள் ஏற்படுத்தப்பட்டு பரிபாலிக்கப்பட்டுவருகின்றதை நன்றாய்க் கவனிக்கலாம், ஆகையால் இக் கல்விதான் நமக்கு இகத்துக்கும் பரத்துக்கும் உற்ற துணையாய் விளங்குகிறது. நமக்குக் கல்வியே அன்னை, கல்வியே தந்தை, கல்வியே நண்பன், கல்வியே ஆசான், கல்வியே மனைவி, கல்வியே மக்கள், கல்வியே கடவுள், கல்வியே அனைத்தும், எங்ஙனமெனில் கல்வியானது தாயைப்போல் ரக்ஷிக்கிறதென்றும்

நலத்தையே நாடுவதில்	— தந்தையையும்
துன்பம்தவிர்த்து இன்பங்கூறுவதில்	— நண்பனையும்
நன்மதிபுகட்டுவதில்	— ஆசானையும்
இன்பமளித்தலில்	— மனைவியையும்
நரகத்தினின்று மீட்பதில்	— மக்களையும்
நற்கதியருளுவதில்	— கடவுளையும்

ஒத்திருக்கிறதென்றும் காண்கிறோம்.

மேலும் இக் கல்வியானது ஒருவனிடமிருக்குமேயானால் அவன் "எக்குடியிற்பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்" என்று புகழப்படுகிறான். பெரியோர் கல்வி கற்கவேண்டுமென்பதாக எவ்வளவோ நீதிவசனங்களை எடுத்து ஓதியுள்ளார். அவற்றுள் சில

கற்கைநன்றே கற்கைநன்றே
பிச்சைபுகினும் கற்கைநன்றே
கல்லாவொருவன் குலநலம்பேசுதல்
நெல்லினுற்பிறந்த பதாகும்மே.

நாற்பாற்குலத்திற் மேற்பாலொருவன்
கற்றிலனுயிற் கீழிருப்பவனே.
அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்.
என்று கூறியுள்ளார். மேலும்

विद्या नाम नरस्य रूपमधिकं विद्याऽधिगुप्तं धनं
विद्या भोगकरी यशः सुखकरी विद्यागुरूणां गुरुः ।
विद्या बन्धुजनो विदेशगमने विद्या परा देवता
विद्या राजसु पूज्यते न हि धनं विद्या विहीनः पशुः ॥

என்று பர்த்திருஹரியும் சொல்லியிருக்கிறார்.

தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்னும் சதுர்வித பலன்களையும் அடைதலே கல்வியாலாயபயன். இப் பயன்களைக் கல்வி எவ்வாறு உண்டுபண்ணுமென்றால் முதலாவது தர்மம். அதாவது அறத்தை எப்படி பயக்குமென்றாராய்வோம். அறம் என்றால் விதிக்கப்பட்டவற்றைப் புரிதலும் விதிக்கப்படாதனவை செய்யாதொழித்தலுமே. இதை நூற் படித்த பயனால் நாம் செய்யக் கடமைப்படுகிறோம். ஆகவேமுதலாவது அறத்தைக் கல்வியினால் பெறுகிறோம். கல்வியினால் பொருள் பெறுகிறோம் இன்பம் பெறுதல் எவ்வாறெனில் கல்விபயின்று அதனால் பொருள்பெற்று அதுகொண்டு தர்மம் இயற்றுவதினால் அடைதலே இன்பம். இதற்கேற்பத்தான் வடமொழியில்

विद्या ददाति विनयं विनयाद्याति पात्रताम् ।
पात्रत्वात् धनमाप्नोति धनाद्धर्मं ततः सुखम् ॥

இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது. இம் மூன்றுமனுபவித்துத் துறவியாயிருக்குந் தன்மையை அடைவதே புருஷார்த்தம் நான்களுள் கடையாகிய வீடாம். இதனால் இகத்துக்கும் பரத்துக்கும் நமக்கு உற்றதுணையாயிருந்து பலகாலம் பெருகச்செய்வது இக் கல்வியொன்றேயென்பது தெற்றென புலப்படும்,

நம் ஆர்ய பாஷையிலிருப்பதுபோல் பிறபாஷையில் அவ்வளவு நலந்தரு நூல்கள் கிடையா. ஆனால் பழைய நூற்களெல்லாம் கற்றோர்களுக்கேயன்றி மற்றோர்க்குப் பயன்படாதனவாயிருக்கின்றன. கல்வியினால் அடையும் பயனைப்பற்றி யோஜிக்குமிடத்து ஒரு கிராமமோ, அல்லது நகரமோ, அல்லது தேசமோ,

உன்னதஸ்திதியை அடைவதற்கு முக்கிய கருவியாயிருப்பது கல்வியே.

சதுர்வித பலன்களான அறம், பொருள், இன்பம், வீடு முதலியவைகளைத் தருவது கல்வியே. தனத்தைத் தேடுவதற்கு சாதகமாயிருப்பது கல்வியே. வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளை விருத்திசெய்வதற்கு முக்கிய கருவியாயிருப்பது இக்கல்வியே.

பல தேசங்களின் நாகரீகங்களையும், சீர்திருத்தங்களையும், பல மதங்களின் உண்மைகளையும், பல தேச ஜனசாரங்களையும் நமக்கு உணர்த்தும் பத்திரிகைகளைப் படிப்பதற்கும் நம்மைத் தகுதியாக்குவது கல்வியே.

நாம் அஸ்வதந்திரத்திற்கு ஆளாகாமல் நமக்குரிய சுதந்தரங்களை அறிந்து அவற்றைப்பெறச் செய்வது கல்வியே.

நமக்கு இருக்கும் அஞ்ஞான இருளை நீக்கி நல்லறிவு உண்டு பண்ணுவது கல்வியே.

ஒருவனுக்குப் பிறப்பு, ஜாதி, மதம், முதலியவற்ருல் மேன்மைவருவதைவிட மேலோர் சபையில் வைத்து அவனை உயர்த்துவது கல்வியே. அரசனைவிடச் சிறப்புறச்செய்வது கல்வியே.

பிறர் சொல்லும் வார்த்தைகளிலிருந்து வரும் குணங்களை அறிந்துகொள்வது கல்வியே. ஒருவனுக்கு அன்பு, அடக்கம், இன்சொல், ஒழுக்கம், முதலியவைகளை உண்டாக்குவதும் கல்வியே.

இத்தகைய கல்வி ஒருவனுக்கு இல்லாவிடில் அவனை மரம் என்றும் முருக்கம்பூவென்றும், குருடனென்றும் சொல்லுகிறார்.

முற்காலத்துப் படிப்புக்கும் இக்காலத்து படிப்பிற்கும் வித்தியாசங்கள் பலவுள. முற்காலத்தில் வேதம், வேதாங்கம், இவைகள் தான் கற்கப்படும் நூல்களாகவிருந்தன. அதனைப் படிப்பவர்களும் அந்தணர் முதலிய இருபிறவியுடையோர் மாத்திரமாயிருந்தனர். அவர்களும் அதனைப் படிக்குங்கால் குருகுலம் சென்று அங்கு பிக்ஷையெடுத்து அவர் அனுமதியின்மீது அதனை அருந்தி ஸமிதாதானம், தண்டம் தரித்தல் முதலிய நியமங்களோடு குருவின் வீட்டுப் பணிவிடைசெய்து மிஞ்சிய காலத்து

குருநாதன் உள்ளம் குளிர்ந்து கற்பிக்கும் சமயத்தில் வித்தையை அப்பியசித்துவந்தார்கள். அதனிலும் புருஷரே கல்விப்பயிற்சியுடையவர் என்பது ஆன்றோர் கூற்று. அக்காலத்தில் ஏனைய வர்ணத்தார்க்கும் எவ்வர்ணத்திலும் ஸ்திரீகளுக்கும் படிப்பில் அதிகாரமில்லை என்றும் அவர்களின் சம்மதமாயிருந்தது.

தற்காலத்திலோ வேத வேதாங்கங்கள் தான் படிக்கவேண்டியது என நிர்ப்பந்தமில்லாமற் போயிற்று. படிப்பவர்களும் இன்னார்தான் என்ற கட்டுப்பாடுமில்லை.

பெரும்பாலும் இராஜபாஷைதேசபாஷைகளேபடிப்புநூல்களாக ஏற்பட்டிருக்கின்றன. எவ்வர்ணத்தாரும் படிக்கலாம் என்ற வழக்கம் வந்தமையால் முற்காலத்துநியமங்கள்யாவும் ஒழிந்தன. முற்காலத்துப்படிப்பு விஷயமானது யுக்திவாதத்திற்கு எட்டாததாயிருந்தது பற்றி அதைக்கேட்கவும் அதற்கு யுக்தி கூறவும் இடையில்லாமலிருந்தது.

தற்காலத்து வித்தையின் விஷயம் யுக்திவாதத்திற்கு எட்டியதாகவே யிருப்பதால் அதற்கு சரியான யுக்தி உரைத்து போதிப்பிக்காதவரை மாணுக்கர்கள் ஏற்றுக்கொள்ளத் தகுதியானவர்களாகவில்லை. முற்காலத்துப் படிப்பு இம்மை மறுமைப் பயனையளிப்பதாயிருந்தது. தற்காலத்திலோ பள்ளிக்கூடங்களில் நடத்தப்படும் யாவும் மறுமைப் பயனுக்கு சிற்றேனும் சாதகமாகுமென ஒருவரும் ஒப்பவில்லை. மறுமைப்பயனில்லாவிடினும் படிக்கும் யாவருக்கும் இம்மைப்பயன் அவசியம் கிடைக்குமோ என்று ஆலோஜித்தால் அதுவும் பூர்ணமாய் கிடைக்குமென்று கூற இடமில்லை. உதாரணமாய் பார்ப்போம்.

உயர்ந்த படிப்பு தேறியவர்களுள் சிலருக்குத்தான் உயர்ந்த வேலை கிடைப்பது முதலிய யிம்மைப்பயன்கள் காணப்படுவதே யன்றி படித்தவர்களெல்லோருக்குமே காணப்படுவதில்லை என்பது யாவரும் அறிந்தவிஷயமே. மேல்வேலை கிடைத்தவர்கள் தாங்கள் படித்த படிப்பு முழுமையும் தங்களுடைய தொழிலில் உபயோகப்படுத்துகிறதில்லை. ஆகையினால் இம்மைப் பயனைமட்டுக் கருதுவானேயாகில் அவன் இக்காலத்து ஆங்கிலேயக்கல்வியைத்தான் கைப்பற்றவேண்டுமென்பது அவசியமென்று தோன்றப்படவில்லை. அதுவும் இப்பொழுது நடந்துவரும் நடவடிக்கைக

ளில் ஜாதிபேதம்,மதபேதம் முதலியவற்றை நோக்குமிடத்தில்நம் குலத்தோர்களுக்கு சாமான்ய ஆங்கிலேய கல்வியானது இம்மைப் பயனையே விளைவிக்காது என்பது நிச்சயம். கைத்தொழில் முதலிய அநேகம் சாதனங்கள் ஆங்கிலேயப் படிப்பைவிட அதிகப் பயனையளிக்கும் வல்லமையுடைத்தாயிருக்கின்றது. இதை அநுஸரித்தே

के दारपोषणरताः ? केदारपोषणरताः ।

என்றபடி வடமொழியிலும் இல்லாள் முதலிய குடும்பத்தாரைக் காக்க வல்லவன் யாவன் என்பதற்கு க்ருஷிமுதலிய கைத்தொழில் பற்றியவனே அதில் சமர்த்தனுவான் என்றும் "ஊதுவான் இல்லான் உழுவான் தலைக்கடைக்கே" என்ற பழமொழியினுலும் க்ருஷி முதலிய கைத்தொழில்களே இம்மைப் பயனைப் பெறுவதற்கும் தேசநன்மையை நாடுவதற்கும் இன்றியமையாத சாதனம் என்பது யாரும் அறிந்ததே. கல்வியுடையோன் சிறப்புடையோனுயினும் தொழிலுடையோனை ஆச்ரயித்தே அவன் உலக யாத்திரையை நடத்தவேண்டியதாகிறது. கல்விக் களஞ்சியமாயினும் ஒருவன் பசிவந்தகாலத்துத் தான் தொழிலைச் செய்யாமலும் தொழிலுடையவனை ஆச்ரயிக்காமலும், பசி நீக்க வழியில்லையே. ஔவையும் பசிவந்தகாலத்தில் ஒரு சூத்ரன் வீட்டை அடைந்து கஞ்சியருந்தினுள் என்பதும் நாம்படித்தறிந்தவிஷயமே. ஆதலால் இம்மைப் பயனை அளிக்கவல்லதும் தேசத்திற்கு நன்மையையும் பெருமையையும் விருத்திசெய்யத்தக்க கருவியான இக் க்ருஷி முதலிய கைத்தொழில்கள், தற்காலக் கல்வியைவிட மேலான இன்பத்தைப் பெறச்செய்வதால் அதைப் பின்பற்றி அத்தகைய தொழில்களில் நமது மனதைச்செலுத்துவது சிறந்தாகும் என்றுலும் கல்வியாலுண்டாகும் இன்பம் இஹத்திலும் பரத்திலும் ஏற்படுமாதலால் அதே மிகச் சிறந்தது. அதையே கைப்பற்றி யாவரும் மேன்மையடைவார்களாக.

கிருஷ்ணன்.

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம :

ஸ்ரீ ஆசார்ய கைங்கர்ய ஸபா.

நாகப்பட்டணம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி கும்பகோணம் நிவாஸிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் சிஷ்யகோடிகளான மஹா ஜனங்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் ஸந்நியாச ஆச்ரமிகளானதாலும், அவர்கள் செய்துவரும் ஸ்ரீசந்திரமௌளீச்வரர் பூஜையும், பிராம்மண ஸந்தர்ப்பணாதிகளும், சிஷ்யகோடிகளாகிய நமது க்ஷேமார்த்தத்தின் பொருட்டேயாதலாலும், ஷை பூஜாதிரவியம் சந்தர்ப்பண செலவுகளுக்காக ஏழைகள் கூட, குருவாரத்துக்கு 1 பைசாவுக்குக் குறையாமல் குருத்தியானம் செய்து ஒரு உண்டியில்போட்டு வைத்து, ஒரு வருஷத்திய 48 குருவாரங்களுக்கும் கூடுதலாகும் 48-பைசா அதாவது 4-அணுவை தீபாராதனை காணிக்கையாக ஒவ்வொரு குடும்பத்தாரும் கொடுத்துவருகிறதோடு, மிராசுதார்கள் பிராம்மண ஸந்தர்ப்பணத்திற்காக வேலிக்குக் குருணி (1-மரக்கால்) நெல்வீதமும், கொடுத்துவருகிறது என்றும் பூர்வீகாளான நம்முடைய முன்னோர்கள்காலத்தில் ஸ்ரீஸ்வாமிகளுக்கு வாக்கு கொடுக்கப்பட்டு, ஸ்ரீஸ்வாமிகள், ஸ்ரீ சந்திரமௌளீச்வரர் பூஜையையும், பிராம்மண ஸந்தர்ப்பணாதிகளையும், சிஷ்யகோடிகளின் க்ஷேமார்த்தம்நடத்திவருகிறது நம்மனோர் அறிந்தவிஷயம். பிரதிவருஷமும் மேற்கண்டபடி ஒவ்வொரு குடும்பத்தாரும் காணிக்கைகளை செலுத்திவருகிறதுடன், பிரதிகுடும்பத்தாரும் காணிக்கைகளை செலுத்திவருவதுடன், பிரதி குடும்பங்களிலும் நடைபெறும் சுப காரியங்களில் 8-அணுவுக்குக் குறையாமல் ஸ்ரீ சந்திரமௌளீச்வரஸ்வாமி ஸம்பாவனையும் செய்துகொண்டுவருகிறோம்.

ஷை பூஜாதிரவியங்களான காணிக்கைகள், ஸம்பாவனைகள் முதலானவைகள் ஸ்ரீ மடத்துக்குச் சரியாய் போய்ச்சேரவேண்டிய காரணத்தால், அது விஷயத்தைச் சிரத்தையுடன் கவனித்து வருகிறதற்காக நாகப்பட்டணத்தில் மேலேகண்ட கைங்கர்ய ஸபா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்ரீஸ்வாமிகள் அவர்களின் அனுக்ரஹ முத்திராதிகாரம்பெற்றவர்கள் ஷை ஸபையை நடத்தி

வருகிறார்கள். அவர்களால் பிரதி வருஷமும் தீபாராதனை காணிக்கைகள், சம்பாவனை முதலியவைகள் வசூலிக்கப்பட்டு பிரதி-ஷு வியாஸ பூஜாகாலத்திற்குள் ஸ்ரீ ஸ்வாமிகள் ஸந்நிதானத்துக்கு அனுப்பப்பட்டுவருகிறது. சிஷ்யகோடிகள் கொடுக்கும் காணிக்கைகள் முதலிய ஸகல விஷயங்களுக்கும் அச்சு ரசீதுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நம்முடைய முன்னோர்களால் கொடுக்கப்பட்ட வாக்குத் தத்தத்தைக் காப்பாற்றவேண்டுவதும், ஸ்ரீஸ்வாமிகள் செய்துவரும் பூஜையும், பிராம்மண ஸந்தர்ப்பணாதிகளும், சரிவர நடத்திவைக்க வேண்டியதும், சிஷ்யகோடிகளாகிற நமது கடமையேயாதலால் பிரதி வருஷமும் ஷை காணிக்கைகள் முதலியவற்றை ஷை ஸபாவைச் சேர்ந்த முத்திராதிகாரிகளிடம் செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டு, ஸ்ரீ சந்திரமௌளீச்வர ஸ்வாமிகளுடையவும், ஸ்ரீபரமாசாரியாளுடையவும், அனுக்ரஹத்திற்குப் பாத்திரராகி இஷ்ட சித்திகளையும் பெற்று, மிக சிரேயஸ்ஸை அடையும்வண்ணம் பிரார்த்திக்கிறோம்.

(குறிப்பு) ஸ்ரீ ஆதிசங்கரபகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் திக்விஜயம்செய்து ஸ்ரீ மஹா கைலாஸத்துக்குத் தர்சனார்த்தம் சென்றிருந்தபோது சிவபெருமான் ஐந்து லிங்கங்களைக் கொடுத்தருளி நான்கு லிங்கங்களை 4 திவ்ய க்ஷேத்திரங்களில் பிரதிஷ்டைசெய்து பூஜிக்கச்செய்வதுடன், பாக்கியான ஸ்ரீ சந்திரமௌளீச்வர லிங்கத்தைச் சிஷ்யகோடிகளின் க்ஷேமார்த்தமாய் ஷை ஸ்வாமிகளே பூஜித்து அதற்கனுகுணமான பிராம்மண ஸந்தர்ப்பணாதிகளை நடத்திவரவேணுமென்று இட்ட கட்டளைப்படியே அந்த பீடம் பரம்பரையாய் நடத்திவருகிறார்கள். இங்ஙனம்,

ஆங்கிரஸ-ஷு சித்திரை 15உ	P. S. சிவராமய்யர் B.A, B.L, (வக்கீல்) தலைவர். N. சாம்பசிவய்யர் B.A., B.L, (வக்கீல்) கார்யதரிசி,

---

மனுஸ்மிருதி அத்தியாயம். 2

சில வசனங்கள்.

(முன் தொடர்ச்சி)

1. இவர்கள் அனைவரும் சேர்ந்தபொழுது, ராஜா, அத்தியயன விரதம் முடித்தவர், இவ்விருவர்களும் மற்றவர்களைக்

காட்டிலும் பூஜ்பர்கள். இவ்விருவர்களுக்குள் அத்தியயனம் முடித்தவர் பூஜ்பர்.

2. சிஷ்யனுக்கு உபநயநம்செய்து யஞ்ஞவித்யைஉபநிஷத்துக்கள், இவைகளுடன் வேதாத்யயனம் செய்விக்கும் பிராம்மணனை ஆசார்யன் என்றுசொல்லுகிறார்கள்.

3. பிழைப்புக்காக வேதத்தில் ஒருபாகத்தையோ, வியாகரணமுதலான வேதாங்கங்களையோ படிப்பிக்கிறவர்களுக்கு உபாத்தியாயர் என்றுபெயர்.

4, விதிப்படி கர்ப்பாதான முதலான ஸம்ஸ்காரங்களைச் செய்து சிசுவை அன்னம்கொடுத்துப் போஷிக்கும் த்விஜன் குரு என்று சொல்லப்படுகிறான்.

5. அக்நிஹோத்ரம் அஷ்டகா முதலிய யாகம், இவைகளைச்செய்ய, தெரிந்து எடுக்கப்பட்டவரை ரித்விக் என்று கூறுவார்கள்.

6. வர்ண, ஸ்வர தவறு இன்னியில், காதில் வேதத்தை ஓதுகிறவர், தாய், தகப்பன் என்று சொல்ல, நினைக்கத்தக்கவர். அவரை ஒருபொழுதும் கோபிக்கச் செய்யக்கூடாது.

7. உபாத்தியாயரைக்காட்டிலும் ஆசாரியர் பதின்மடங்கு பெரியவர். ஆசாரியரைக்காட்டிலும் தகப்பன் நூறுமடங்குபூஜ்யர். பிதாவைக்காட்டிலும் மாதா ஆயிரம்மடங்கு மரியாதைக்குத் தக்கவள்.

8. ஜன்மத்தை மாத்திரம் தரும் தகப்பன், உபநயநம்செய்து வேதம் தரும் தகப்பன், இவ்விருவர்களில் வேதம் ஓதும் தகப்பனே பெரியவர். ஏனென்றால் வேதம் கிரஹிக்க யோக்யமான ஜன்மம், இப்பிறப்பு, மறுபிறப்பு இவ்விரண்டிலும் ஸ்திரமான பயனை—பிரம்ம பிராப்திபயனை—கொடுக்கும்.

9, கொஞ்சமோ, மிகுதியோ, வேதம் ஓதி உபகாரம் செய்பவரைக் குருவென்று கொண்டாடவேண்டும். வேதம் மகாபயனை கொடுக்கத்தக்கதல்லவா?

10. வேதாத்யயனத்திற்கு யோக்யமான ஜன்மமாகிய உபநயநம் செய்வித்து வேதார்த்தம், தர்மங்கள் இவைகளை கற்பிக்கிறவர் வயதில் சிறுவராயினும் வயது சென்றவருக்குக்கூட தர்ம விஷயமான பிதாவாக ஆவார். (தொடரும்)

R. ஸ்வாமிநாதய்யர்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

ஸம்வரணன்.

1. சந்த்ரவம்சத்தில் ரிக்ஷன் என்று ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஸம்வரணன் என்ற பிள்ளை பிறந்தான். தந்தைக்குப் பிறகு ஸம்வரணன் அரசனானான். அவன் சிறந்த தைவபக்தன். மிகுந்த புண்யசாலி. உயர்ந்த குணமுள்ளவன். ஸூர்யனை அவன் உபாஸித்து வந்தான். ஒருநாள் வேட்டையாட வனத்திற்குச் சென்றான். அங்கு ஓர் அழகிய பெண்ணைப்பார்த்தான்.

2. அவள் ஸூர்யனுடைய பெண். அவள் பெயர் தபதீ. மிக ஸௌந்தரி அவள். அழகிற்கேற்ற குணமும் உள்ளவள். தக்க வயது வந்தது இவளுக்கு. இவளுக்கேற்ற பதி யார்? என்று ஸூர்யன் யோசித்தார். தனது பக்தனான ஸம்வரணனைத்தவிர வேறு எவரும் ஏற்றவரில்லை. அவனுக்கே தபதியைக்கொடுப்போம் என்று தீர்மானித்தான்.

3. தபதியின் அழகு ஸம்வரணன்மனதை இழுத்தது. அவள் அருகே சென்றான். பெண்ணே! நீயார்? ஏன் இக்காட்டில் தனியாக வந்தாய்? உன்மேல் எனக்கு ஆசை உண்டாகிறது. என்னை மணந்துகொள்! என்று வேண்டினான். அக்கன்யகை ஒன்றும் சொல்லாமல் மறைந்துவிட்டாள். அரசரோ அவளை நினைத்து மோஹமடைந்தான்.

4. அரசனது பரிதாபநிலையைக்கண்டு தபதி வருந்தினாள். அவனருகேவந்தாள். அரசனும் மூர்ச்சை தெளிந்தெழுந்தான். மறுபடியும் முன்போலவே வேண்டினான். அவள் தன் ஸமாசாரத்தைச்சொல்லி தன் பிதாவைக்கேட்டு தன்னை மணக்கலாம் என்றாள். இதற்குள் அரசனைத் தேடிக்கொண்டு மந்திரிவந்தான். தபதி தன்னிடம் சென்றாள்.

5. ஸம்வரணனுடைய எண்ணத்தை அறிந்த மந்திரி வஸிஷ்டரை அழைத்தான். வஸிஷ்டர் அரசனுடைய புரோஹிதர். அவர் பிரும்மாவினது மானஸிக புத்ரரல்லவா! மந்திரத்தின் மஹி

மையால் அவர் எங்கும் போவர். உடனே ஸூர்யமண்டலத்தை நாடிச்சென்றார். இவரைக்கண்டு பாநு ஸந்தோஷமடைந்தார்.

6. ஸ்வாகதம் சொன்னார். அர்க்யம் பாத்யம் ஆசமநீயம் அளித்தார். இஃதன்றோ நாம் வந்த அதிதிகளுக்குச் செய்ய வேண்டிய முதல் கடமை. வஸிஷ்டர் ஸூர்யனைத் துதித்தார். அந்தச்லோகங்களையே ஸந்த்யாவந்தனம் செய்வோர் உபஸ் தாநத்திற்குப்பிறகு சொல்கின்றனர். இதைக்கேட்டு விவஸ்வான் பரம ஸந்தோஷமடைந்தார்.

7. உமக்கு என்னவரம் வேண்டும் என்றார். பெரியோர் தனக்கென ஒன்றும் விரும்பாரல்லவா? பரோபகாரமே அவர் களது நோக்கமல்லவா? வஸிஷ்டர் தபதியை ஸம்வரணனுக்குக் கொடுக்கும்படி வேண்டினன். முன்னதாகவே ஸூர்யனது ஸங் கல்பமும் அதல்லவா? ஆகையால் அக்கன்யகையை வஸிஷ்ட ரோடு அனுப்பிவிட்டார்.

8. வஸிஷ்டர் வநத்திலேயே தபதிக்கும் ஸம்வரணனுக்கும் விவாஹம் செய்துவைத்தார். அவன் ராஜ்யத்தை மந்த்ரிகளிடம் ஒப்பிவித்தான். மனைவியுடன் வநத்திலே வஸித்துவந்தான். ஒருஸமயம் இவனது நாட்டில் பஞ்சம் உண்டானது. பனிரண்டு வருஷம் ஓர் துளிமழைகூடப் பெய்யவில்லை ஜனங்கள் தவித்தார்கள்.

9. உடனே வஸிஷ்டர் காட்டிற்குச்சென்றார். அரசனை மனைவியுடன் அழைத்து வந்தார். ஏன்? சிஷ்யனது பாபம் குரு வைச்சாரும். ஆதலால் குரு சிஷ்யனைத் தப்புசெய்யாமல் காக்க வேண்டும். அரசன் வந்தவுடன் மழை பொழிந்தது பூமி குளிர்ந் தது. நாடு செழித்தது. குடிகள் வாழ்த்தினர்.

10. ஸம்வரணனைப்போல் தைவபக்தி இருந்தால் அஸாத்ய மான கார்யமும் கைகூடும். வஸிஷ்டரைப்போல் ஓர் உத்தம குருவை அடைந்தால் ஆகாத கார்யமில்லை. காலையும் மாலையும் கடவுளைத்தொழு! ஸத்குருவைச் சரணமடை.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

பிராணனைவிட மதமே மேல். 30வ கல்கத்தாவில் ஓர்வியாஜ்யம் நடந்தது. ஓர் மஹம்மதியர் தனது தாடியை எதிரி எடுத்துவிடுவதாகக்கூறி மத உணர்ச்சியைப் புண்படுத்தியதாகக் குற்றம். இது அவ்வளவுபெரிய விஷயமா? என்று நீதிஸ்தலத்தார்கேழ்க்க பல மஹம்மதியர் தங்கள் பிராணனைவிட மதம் சிறந்ததென்றனர், நமது மதமோ சிகை இல்லாதவன் எக்காரியத்திற்கும் உதவாதவன் என்று கூறுகிறது. மதாபிமான முள்ளோர் தலையைக் கெடுத்துக்கொள்வாரா? நாளுக்குநாள் தலைதவரி வருகிறது.

ஸத்விஷயகாலக்ஷேபம். 1வ கொண்ணூரில் காஸ்மாபாலிடன் (எல்லாரும் கலந்த) ஸபையினாதரவில் ஸ்ரீமான் ஸி. வி. வெங்கட்டரமணய்யங்கார் அக்ராஸனம் வஹிக்க ஸ்ரீமான் ஸி. எஸ். முத்துஸாமி அய்யர். ஸ்ரீ ராமாயணத்தைப்பற்றி ஓர்உபன்யாஸம் செய்தார். வெய்யற்காலத்திற்காக நீலகிரிக்கருகிலுள்ள கிராமங்களில் நம்மவர் வஸிப்பது ஓர் தற்கால வழக்கம். அங்கு அநேக லௌகிக ஆட்டபாட்டங்களே நடப்பது வழக்கம். புது மாதிரியாக இது நடந்ததற்கு ஸந்தோஷிக்கிறோம்.

சிறந்ததீர்மானம். 1வ கொச்சி அரசாங்கம் ஸ்ரீராமவர்மா ஸம்ஸ்கிருதகலாசாலையை இரண்டுபிரிவாக்க ஓர் உத்திரவுசெய்தது. காரணமென்ன? வேதசாஸ்த்ரம் போதிக்குமிடத்தில் ஸகல ஜாதியாருக்கும் ப்ரவேசம் வேண்டுமென்ற கிளர்ச்சி பலநாளாக பரவி வந்தது. அதைத்தவிர்க்க வேதசாஸ்திரங்களில் வழக்கப்படியே அதற்கேற்றவர்தான் சேர்க்கப்படுவர். மற்றோர் பிரிவில் எல்லோரும் சேர்க்கப்படுவர். இதில் காவ்யமாத்ரம் போதிக்கப்படும். இதுவும் அநர்த்தகாரணமென்பதை நாமறியாமலில்லை. இக்காலத்தில் இதைவிட நாம் அதிகம் எதிர்பார்ப்பதற்கில்லை.

திரும்புகிறார். 4வ ஜெர்மினியின் ராஜதானியான பெர்லின் சட்டசபையில் ஓர் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது. கடவுள் இல்லை என்ற கொள்கைஉடைய சபைகளையும் அவர்களது செயலையும் அடியோடுதுலைப்பதே இதன் நோக்கம். கண்ணுக்குத் தெரியாத கடவுள் ஒருவரை நம்பி தன்னிஷ்டம்போல் திரிவதற்கில்லாமல் பல தைவிகக்கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு கஷ்டப்படுவானேன்? என்று கொள்கை மேனாட்டில் தோன்றிவளர்ந்து வேரூன்றி பூத்துக் காச்சு பலனையுமளித்தது. அப்படிப் பல

ஆபத்துகளை விளைவிப்பதால் அந்நாஸ்திகமரத்தை வேரோடுபிடுங்கி எரிய முன் முறைக்கே மேனாடு திரும்புகிறது. வேதோபநிஷத்துகள் மூலமாக அரியபெரிய தத்துவத்தை உலகிற் கூட்டிய இப் புண்யநாட்டுதன்னை மறந்து நாஸ்திகநாட்டை ஆசார்யனாகக் கொண்டிருக்கிறது. குருட்டு குரு குழியில் விழுவதைக்கண்டேனும் பாரதவர்ஷம் விழித்துக்கொள்ளுமோ?

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

புத்தகவரவு மதிப்புரை.

ஆஸ்திகசிகாமணிகாள் சிறிதிங்கு செவிசாய்த்திடுவீர்களாக!

பவப்பிணிபிடித்துப் பலவிதத்திலும் பரிதபிக்கும் பிராணிகளுக்குப் பரமேச்வரனது ப்ரஸாதமின்றி பவப்பிணியையொழித்து சுகப்படுவதற்கு வேறுவழியில்லை. அந்தப் பரமேச்வர ப்ரஸாதமும் பார்வதீ தேவியாரைப் பாதி சரீரமாகவும், அம்புலியைச் ஆபரணமாகவும், அரவங்களை அங்காபரணங்களாகவும் அமைத்துக்கொண்ட நெற்றியில் கண்படைத்த நீலகண்டப் பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ஆராதிப்பது முதலிய ஸாத்விக பக்தியில்லாமல் கிடைப்பது அரிது. அத்தகைய பக்தி சிவபெருமானுடைய திவ்ய குணகணங்களைத் தெரிந்துகொள்ளாவிடில் நிலைப்பதரிது. இதற்காகவே பல புராணங்களில் சிவபெருமானுடைய குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. அதிலும் ஸ்காந்தோப புராணமாகிய உபமந்யு மஹர்ஷியினால் உபதேசிக்கப்பட்ட அறுபத்துமூன்று (63) நாயன்மார்களின் சரித்திரங்களைச் சுருக்கமாகத் தெரிவிக்கும், "சிவபக்தவிலாஸம்" என்ற அரிய பெரிய நூலில் பக்தியின்பெருமை விரிவாகக் கூறப்படுகின்றது. அந்த புத்தகம் தேவநாகரலிபியில் வேதாந்த விபூஷண சாஸ்த்ர ரத்நாகரபிருதம் பெற்றவரும் சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபாலும் ஆகிய பிரம்மஸ்ரீ மகாமகோபாத்யாய க. ச. கிருஷ்ணசாஸ்திரிகளால் அனேக காப்பிகளுக்கிணங்கி பரிசோதிக்கப்பட்டு அச்சிலிட்டுவெளியிடப்பட்டிருக்கிறது. அதைப்படிப்பதிலிருந்தே பக்தர்களின் மஹிமையும் பக்தியின் பெருமையும் நன்குவிளக்கும். வாங்குபவர்களின் ஸௌகர்யத்திற்காகவே குறைந்த விலைரூ 2—0—0 ஆக வைக்கப்பட்டிருக்கிறது. ஷை சாஸ்திரிகளவாளிடத்திலேயே வேண்டுபவர்கள் வாங்கி பாராயணம் செய்து ஐஹிகாமுஷ்மிக சிரேயஸ்ஸை அடைவார்களாக.

பத்திராதிபர்.